டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 1.10.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 087 | Madurai | Online Edition

# இயற்கை பாதுகாப்பு என்பது ஒரு தேசியப் பொறுப்பு

## மத்திய அமைச்சர் பூபேந்தர் யாதவ் பேச்சு

புது தில்லி, செப்.30

இந்திய வன அதிகாரிகள் சங்கமும் ’இந்தியன் மாஸ்டர் மைண்ட்ஸ்’ தளமும் இணைந்து புது தில்லியில் ஏற்பாடு செய்திருந்த சுற்றுச்சூழல் போராளிகள் விருது 2026 மற்றும் கருத்தரங்கிற்கு, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் தலைமை தாங்கினார்.

வனம், வன உயிரினங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறப்பான பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மூத்த வனத்துறை அதிகாரிகள், பாதுகாப்பாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், விஞ்ஞானிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் தொழில் துறைப் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய அமைச்சர், காடுகள், வன விலங்குகள், விவசாயம், நீர், வாழ்வாதாரங்கள், மனிதக் குடியிருப்புகளை ஒன்றிணைக்கும் ஒரு நிலப்பரப்பு அணுகுமுறைக்கு அழைப்பு விடுத்தார். பாதுகாப்பு என்பது வெறும் அரசின் பொறுப்பு மட்டுமல்ல, அது ஒரு தேசியப் பொறுப்பு என்று அவர் கூறினார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# விக்ரவாண்டி எசாலம் கிராமத்தில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மூலம் இரசாயன உரப் பயன்பாட்டைக் குறைத்தல் பயிற்சி



விழுப்புரம், செப்.30

விழுப்புரம் மாவட்டம், விக்ரவாண்டி வட்டாரம், எசாலம் கிராமத்தில் வேளாண்மைத் துறை மற்றும் ஆத்மா திட்டத்தின் சார்பில் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மூலம் இரசாயன உரப்பயன்பாட்டைக் குறைத்தல் குறித்த பயிற்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் கங்காகௌரி தலைமை தாங்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சங்கீதா வரவேற்றார்.

பயிற்சியில் விழுப்புரம் மாவட்ட மண்வள வேளாண்மை அலுவலர் ஜெரிகாட் மெர்சி கலந்து கொண்டு, மண் பரிசோதனையின் அடிப்படையில் பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்துகளை வழங்குதல், இயற்கை மற்றும் உயிர் உரங்களை பயன்படுத்துதல், இரசாயன உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவில் மட்டுமே பயன்படுத்துதல் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக விளக்க மளித்தார்.

மேலும், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை முறையை கடைப்பிடிப்பதன் மூலம் இரசாயன உரச் செலவைக் குறைத்து, மண் வளத்தை பாதுகாப்பதுடன், நிலையான முறையில் பயிர் மகசூலை அதிகரிக்க முடியும் என அறிவுறுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் உதவி வேளாண்மை அலுவலர் பனஸ்ரீ பானு, வேளாண் திட்டப் பணிகள், விவசாயிகளுக்கு வழங்கப்படும் இடுபொருட்கள் மற்றும் பல்வேறு மானியத் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அன்பு மற்றும் இளவரசன் ஆகியோர் செய்திருந்தனர். இதில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காளான் மற்றும் முருங்கையிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், செப்.30

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காளான் மற்றும் முருங்கையிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி 06.10.26 மற்றும் 07.10.26 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மருதமலை சாலை வழியாக, கோயம்புத்தூர் - 641 003ல் நடைபெறும்.

கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- **முருங்கை**

முருங்கை பொடி, பருப்பு பொடி, சாம்பார் பொடி, பிஸ்கட், அடை மிக்ஸ், ஊறுகாய், நூடுல்ஸ்

- **காளான்**

உலர்ந்த காளான், காளான் பொடி, சூப் மிக்ஸ், பிஸ்கட், ஊறுகாய், காளான் கிரேவி கலவை, பிழிதல் தொழில்நுட்பம்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) - பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## தேனீ வளர்ப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சி

கோயம்புத்தூர், செப்.30

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், பூச்சியியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் தேனீ வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அக்டோபர் 2026 மாதத்திற்கான பயிற்சி, 06.10.2026 செவ்வாய்க்கிழமை அன்று அளிக்கப்படும்.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்**

- தேனீ இனங்களை கண்டுபிடித்து வளர்த்தல்
- பெட்டிகளில் தேனீ வளர்க்கும் முறை மற்றும் நிர்வாகம்
- தேனீக்கு உணவு தரும் பயிர்கள் மற்றும் மகரந்த சேர்க்கை மூலம் மகசூல் அதிகரிக்கும் பயிர்களின் விவரம்
- தேனைப் பிரித்தெடுத்தல்
- தேனீக்களின் இயற்கை எதிரிகள் மற்றும் நோய் நிர்வாகம்

பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர், பயிற்சி நாளன்று காலை 9.00 மணிக்கு பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வந்து அடையாள சான்று சமர்ப்பித்து பயிற்சிக் கட்டணம் ரூ.590/- (ரூபாய் ஐநூற்று தொண்ணூறு மட்டும்) நேரிடையாக செலுத்த வேண்டும். மாலை 5.00 மணி வரை பயிற்சி நடைபெறும். பயிற்சி இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், தொலைபேசி எண் : 0422-6611214, மின்னஞ்சல் : entomology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.



# தரமான விதைகள் விவசாயிகளுக்கு சென்று சேரவே விதைப்பரிசோதனை நிலையங்கள்

தேனி, செப்.30

இன்று உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளோம் எனில் அதற்கு காரணம் உழவர் பெருமக்களுக்கு நல்ல தரமான விதையை உரிய காலத்தில் விநியோகித்ததே என்று கூறினால் அது மிகையாகாது. விதை உற்பத்தி, விநியோகம் போன்ற முக்கியமான திட்டத்தில் விதைப்பரிசோதனை என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

தரமான விதைகளின் பயன்பாடு 15 முதல் 20 சதம் அதிகமான விளைச்சலுக்கு வழி வகுக்கின்றன. தரமான விதைகள் மூலம் உயர் விளைச்சல் பெற்று அதிக வருவாய் ஈட்டும்படி விதை உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகளை தேனி விதை பரிசோதனை அலுவலர், சி.சிவகாமி, மூத்த வேளாண்மை அலுலர் ம.சதீஸ் மற்றும் வேளாண்மை அலுவலர் ஜெ.மகிா தேவி ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.

தரமான விதையானது இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச விதை சான்றளிப்புத் தரத்திற்கு ஏற்ற புறத் தூய்மை, இனத்தூய்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம் மற்றும் விதையின் நலத்துடன் கூடிய வீரியமும் கொண்டிருக்க வேண்டும்.

நல்ல விதையை தேர்வு செய்ய விவசாயிகளிடம் உள்ள விதைகளை பரிசோதனை செய்து கொள்வது மிகவும் அவசியம். விவசாயிகள் சாகுபடிக்கான விதை குவியலில் இருந்து மாதிரி விதைகளை வெங்காயம், காரட், நூல்கோல், காலிபிளவர், முட்டைக்கோஸ், தக்காளி ரகம், ஒட்டு ரகம், மிளகாய், கத்தரி, டர்னிப் விதைகள் 10 கிராம், கேழ்வரகு, கம்பு, எள் 25 கிராம், நெல், கீரை, பீட்ரூட், முள்ளங்கி, சணப்பு 50 கிராம், வெள்ளரி, உளுந்து, பூசணி, வெண்டை, பாசிப்பயறு, கொள்ளு, சோளம், தர்பூசணி, சூரியகாந்தி ரகம் மற்றும் ஒட்டுரகம், சுரை, சீனி அவரை, பருத்தி ஒட்டு பஞ்சு நீக்கியது 100 கிராம், துவரை, தட்டைப்பயறு, பீர்க்கு, சோயா பீன்ஸ், பருத்தி ரகம் பஞ்சு நீக்கியது 150 கிராம், பருத்தி ஒட்டு பஞ்சு உள்ளது 200 கிராம்,

புடலை, பட்டாணி, ஆமணக்கு, பாகல் 250 கிராம், பருத்தி ரகம் பஞ்சு உள்ளது 350 கிராம், கொண்டக்கடலை, கொத்தமல்லி 400 கிராம் மற்றும் நிலக்கடலை, மக்காச்சோளம் 500 கிராம் கொடுத்தால் விதைப்பரிசோதனைக்குப் போதுமானது.

விதை மாதிரியுடன் விவசாயி பெயர், தந்தை பெயர், கிராமம், தாலுகா, மாவட்டம், அலைபேசி எண், பயிர், ரகம், விதை அளவு (கிராமில்) போன்ற தகவல்களையும், ரூ.80/- பரிசோதனை கட்டணத்தையும் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ விதைப்பரிசோதனை நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும்.

விவசாயிகளுக்கான பரிசோதனை முடிவுகள் அலுவலகத்தில் நேரடியாக பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலமாக மாதிரிகள் அனுப்பிய விவசாயிகளுக்கு பரிசோதனை முடிவுகள் தபால் மூலமாக விவசாயிகளின் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்துள்ளனர்.

**பரிசோதனைக்காக விதை மாதிரிகளை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :** மூத்த வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், தேனி விற்பனைக்குழு அலுவலக வளாகம், முதல் தளம், 215, பெரியகுளம் ரோடு, சுக்குவாடன் பட்டி, தேனி -625 531.

# அட்மா திட்டத்தில் மாவட்ட அளவிலான பயிற்சி



சேலம், செப்.30

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டாரம் துக்கினாம்பாளையம் கிராமத்தில் அட்மா திட்டத்தின் சார்பில் மாவட்ட அளவிலான பயிற்சி 29.09.26 அன்று மண்வளம் மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை என்ற தலைப்பில் பயிற்சி நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக பிரபாகரன் (பயிற்சியாளர்) மண் வளத்தின் அவசியம் மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை பற்றிய தொழில்நுட்பங்களை கூறினார். வாழப்பாடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கண்ணன் உயிர் உரங்களின் பயன்பாடு மற்றும் பசுந்தால், மற்றும் பசுந்தழை உரங்களின் முக்கியத்துவம் பற்றி விவசாயி களுக்கு எடுத்துக் கூறினார். துணை வேளாண்மை அலுவலர்

தமிழ்மணி வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை பற்றி கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சந்திரசேகரன் அனைத்து விவசாயிகளையும் வரவேற்று பேசினார் மற்றும் மண் பரிசோதனை முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறினார்.

பயிற்சியில் கலந்து கொண்ட ஒவ்வொரு விவசாயிக்கும் ஊக்கத்தொகை ரூ.250 அவர்களுடைய வங்கி கணக்கிற்கு NEFT மூலம் வழங்கப்பட்டது மற்றும் மதிய உணவு, சிற்றுண்டி வழங்கப்பட்டது. பயிற்சிகான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர்களான திலகவதி ஏற்பாடு செய்திருந்தனர்.



# பயிர் உற்பத்தியில் தன்னிறைவும் மற்றும் இயற்கை முறையில் விதை உற்பத்தி பற்றிய வெளிவளாக பயிற்சி



கடலூர், செப்.30

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம் மற்றும் வேளாண்மை துறை (ஆட்மா திட்டம்), குமராட்சி சார்பாக 30.09.26 அன்று குமராட்சி வட்டாரம், கூடுவெளிசாவடி கிராமத்தில் பயிர் உற்பத்தியில் தன்னிறைவும் மற்றும் இயற்கை முறையில் விதை உற்பத்தி பற்றிய வெளிவளாக பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியை விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர். க. நடராஜன், துவக்கி வைத்து, பயிர் உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றி எடுத்துரைத்தார். இப்பயிற்சியை குமராட்சி வேளாண்மை உதவி இயக்குநர் தெ.தமிழ்வேல், தலைமை தாங்கி, சம்பா பருவத்தில் உள்ள நெல் பயிருக்கு தேவையான தொழில் நுட்பங்கள் மற்றும் வேளாண்மை துறையில் நடைமுறையில் உள்ள திட்டங்களை பற்றி எடுத்துரைத்தார். விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானி முனைவர் கோ.சத்தியநாரயணன், கலந்துக் கொண்டு உளுந்து மற்றும் பாசிபயறு உற்பத்திக்கு தேவையான தொழில்நுட்பங்கள் மற்றும் இயற்கை முறையில் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றியும் எடுத்துரைத்தார். மேலும், இப்பயிற்சியில் உயிர் உரங்கள், விதை அமிர்தம், நுண்ணூட்ட உரங்கள் பயன் படுத்தும் முறைகள் மற்றும் விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இப்பயிற்சியில் அத்மா திட்ட வேளாண்மை அலுவலர் கல்பனா, ரஞ்சித், கனகசபை, மனோகர் மற்றும் பாஸ்கர் ஆகியோர் இப்பயிற்சியில் கலந்துக் கொண்டனர். இறுதியாக வேளாண்மை அலுவலர் கல்பனா, நன்றியுரை வழங்கினார். இப்பயிற்சியில் கூடுவெளிசாவடி கிராமத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர்.

# விவசாயிகளுக்கான 2 நாள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பயிற்சி முகாம் மற்றும் தென்னை வளர்ச்சி வாரியத்தின் சிறப்பு கூட்டம்



கோயம்புத்தூர், செப்.30

மத்திய வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சகத்தின் ஆய்வு அறிக்கையின்படி தமிழகத்தில் குறிப்பாக கோவை, திருப்பூர், கிருஷ்ணகிரி போன்ற மாவட்டங்களில் விளையும் காய்கறி மற்றும் பழங்களில் அதிகப்படியான பூச்சி/பூஞ்சாணக் கொல்லிகள் எஞ்சிய நஞ்சு மற்றும் பரிந்துரைக் கூடாத பூச்சிக்கொல்லிகள் அதிக அளவில் பயன்படுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சி, தென்னை வளர்ச்சி வாரியம் மற்றும் தமிழக தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் சார்பில் கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வடக்கு வட்டாரத்தில் விவசாயிகளுக்கான இரண்டு நாள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி முகாம் செப்டம்பர் 29 மற்றும் 30ஆம் தேதிகளில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தென்னிந்திய தென்னை உற்பத்தியாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. இதன் தலைவர் சக்திவேல் அனைவரையும் வரவேற்று பேசினார். அடுத்து பொள்ளாச்சி வடக்கு தோட்டக்கலை உதவி இயக்குனர் வசுமதி தற்போது தோட்டக்கலை துறையில் உள்ள திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் அடுத்து உரையாற்றிய தென்னை வளர்ச்சி வாரிய முதன்மை கள அலுவலர் முருகானந்தம் தென்னை வளர்ச்சி வாரிய திட்டங்கள் மற்றும் திட்டம் நடைமுறை படுத்தும் முன்னேற்பாடு கூட்ட நடைமுறை பற்றி எடுத்துரைதார். நிகழ்ச்சியில் அடுத்து உரையாற்றிய மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் பயிர் பாதுகாப்பு அலுவலர் முனைவர் இரா.கோவிந்தராஜ் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் செயல்பாடுகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பற்றிய வழிமுறைகளை விவசாயிகளுக்காக எடுத்

துரைத்தார். அடுத்து உரையாற்றிய மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் பயிர் பாதுகாப்பு அலுவலர் ம.அமுதா விதை நேர்த்தியின் முக்கியத்துவம் மற்றும் பூச்சி களைக் கட்டுப்படுத்தும் முறைகள், பூச்சிக் கொல்லிகளால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் பூச்சிகளைப் பாதுகாக்கும் முறைகள், பயிர் பாதுகாப்பில் வேம்பு சார்ந்த பூச்சி விரட்டிகள் பங்கு வயல் சூழல் ஆய்வு, தென்னையில் பூச்சி நோய் கட்டுப் பாடு பற்றி விரிவாக எடுத்துரைத்தார். அடுத்து உரையாற்றிய கோயம்புத்தூர் வேளாண் அறிவியல் நிலைய வல்லுநர் சகாதேவன் வறட்சியில் இருந்து பயிர்களை பாதுகாக்கும் பூசா ஜெல் தொழில் நுட்பம், வேஸ்ட்டிகம்போசர் தொழில் நுட்பம், உயிர் வேலியின் முக்கியத்துவம், வெள்ளை ஈ கட்டுப்பாடு செயல் விளக்கம் பற்றி விரிவாக விளக்கம் அளித்தார். நிகழ்ச்சியின் நிறைவாக உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் பயன்கள், உற்பத்தி செய்யும் முறைகள் பற்றி விரிவாக விளக்கம் அளிக்கப் பட்டது. இப்பயிற்சியின் முடிவில் துணை தோட்டக்கலை அலு வலர் ராம்குமார் நன்றியுரை ஆற்றினார். மேலும், இப்பயிற்சியில் 60க்கும் மேற்பட்ட விவசாயிகள் திறளாக கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தமிழகத்தில் பாமாயில் உற்பத்தி உயர்வு - தெரியுமா?



நமது நாட்டில் எண்ணெய் வித்துகளின் தேவையில் பற்றாக்குறை நிலவுகிறது. 96% பாமாயில் (PALM OIL) வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது என்பது நாம் அறிந்ததே. இந்த இறக்குமதியை படிப்படியாக குறைக்கவும், அன்னிய செலாவணியை மிச்சப்படுத்த நமது மத்திய அரசு தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் – எண்ணெய் பனை திட்டம் கடந்த 2022ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டது.

தமிழகத்தில் 2018 வரை எண்ணெய் பனை சாகுபடி அதிகமாக இருந்து வந்தது. ஆனால் கஜா புயலால் ஏகப்பட்ட பரப்பில் எண்ணெய் பனை மரங்கள் பாதிக்கப்பட்டது. இதனால் பெருமளவில் சாகுபடி குறைந்து விட்டது. இதுமட்டுமல்ல தொடர்ந்து பாமாயில் விலையில் தொய்வு ஏற்பட்டதும் ஒரு முக்கிய காரணமாகும்.

**தற்போதைய நிலவரம்?**

எண்ணெய் பனை திட்டம் தீவிரமாக தமிழகத்தில் செயல் படுகிறது. தற்போது தமிழகத்தில் பாமாயில் உற்பத்தி 10,000 டன்னாக உயர்ந்துள்ளது என கோத்ரேஜ் அக்ரோ வெட்' நிறுவனம் தெரிவித்துள்ளது.

**எண்ணெய் பனையில் எந்த பகுதியிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது?**

பழத்தின் சதையிலிருந்து பாமாயில் எடுக்கப்படுகிறது. உள்ளிருக்கும் விதையிலிருந்து பாம் கர்னல் எண்ணெய் (PALM KERNEL OIL) எடுக்கப்படுகிறது.

**தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் எண்ணெய் பனை சாகுபடி செய்யப்படுகிறது?**

தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகை, அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, புதுக்கோட்டை, சிவகெங்கை, கோவை, தேனி, வேலூர், திருவண்ணாமலை.

**எண்ணெய் பனை சாகுபடியை வழிநடத்த கூடிய தனியார் அமைப்புகள் எவை தெரியுமா?**

1) கோத்ரேஜ் நிறுவனம் சார்பில் 10 மாவட்டங்களில் 2000 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருவதாக தகவல்.

2) பதஞ்சலி நிறுவனம் - கோவை, தேனி, சேலம் ஆகிய மாவட்டங்களில் சாகுபடியில் ஈடுபட்டு வருகிறது.

3) வைதேகி நிறுவனம் - வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன.

எண்ணெய் பனையில் எண்ணெய் (OIL) எடுக்கும் ஆலை தமிழகத்தில் எங்குள்ளது? தெரியுமா?

தமிழகத்தில் விளையும் மொத்த எண்ணெய் பனையையும் தஞ்சாவூர் அடுத்த ஈச்சங்கோட்டையில் தான் அரைத்து எண்ணெய் எடுக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**எண்ணெய் பனை சாகுபடிக்கு அரசு வழங்கும் மானியம் எவ்வளவு தெரியுமா?**

எண்ணெய் பனை சாகுபடிக்கு அரசு வழங்கும் மானியமாக (SUBSIDY) 29,000/ ஹெக்டேர் மட்டுமே.

**ஒரு டன் எண்ணெய் பனை பழங்களின் கொள்முதல் விலை எவ்வளவு தெரியுமா?**

ரூ. 19,228/- மட்டுமே.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

மதுரை மாவட்ட வேளாண்மை அறிவியல் மையத்தில் அக்டோபர் மாதம் நடைபெறும் பயிற்சியின் விபரங்கள், பயிற்சி நடைபெறுமிடம் மற்றும் பயிற்சி நடைபெறும் நாள் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண். | தேதி | பயிற்சியின் தலைப்பு | இடம் |
|---|---|---|---|
| 1 | 06.10.2026 | பெண்களின் சுய மேம்பாடு மற்றும் மதிப்பு கூட்டுதல் | தெற்கு ஆமூர் |
| 2 | 07.10.2026 | மக்காச்சோளத்தில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) | திருமங்கலம் |
| 3 | 08.10.2026 | தளிர் கீரைகள் வளர்ப்பு (கட்டண பயிற்சி) | வேளாண்மை அறிவியல் நிலையம் |
| 4 | 09.10.2026 | தோட்டக்கலை சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட உணவுப் பொருட்களுக்கான பெயரிடுதல் மற்றும் வணிக முத்திரையிடல் | வேளாண்மை அறிவியல் நிலையம் |
| 5 | 12.10.2026 | தேனீ வளர்ப்பு (கட்டண பயிற்சி) | வேளாண்மை அறிவியல் நிலையம் |
| 6 | 13.10.2026 | உளுந்தில் தரமான விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் | கிடாரிப்பட்டி |
| 7 | 15.10.2026 | வெள்ளரிக்காய் உற்பத்தி முறைகள் | மதுரை கிழக்கு |
| 8 | 23.10.2026 | நுண்கீரைகளில் மதிப்புக்கூட்டல் | வேளாண்மை அறிவியல் நிலையம் |
| 9 | 27.10.2026 | செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு | வேளாண்மை அறிவியல் நிலையம் |
| 10 | 28.10.2026 | மண் வள மேலாண்மை மற்றும் தேவைக்கேற்ப உரமிடும் தொழில்நுட்பங்களின் பயன்பாடு | வேளாண்மை அறிவியல் நிலையம் |
| 11 | 29.10.2026 | பருத்தியில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை (IPDM) | திருமங்கலம் |

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# தூய்மை விழிப்புணர்வு முகாம் - Swachhata Hi Seva 2026

கோயம்புத்தூர், செப்.30

கோயம்புத்தூர் மாவட்ட வேளாண் அறிவியல் நிலையத்தின் சார்பில் தூய்மை விழிப்புணர்வு முகாம் - 2026, செப்டம்பர் 17ஆம் தேதி முதல் அக்டோபர் 2ஆம் தேதி வரை பல்வேறு கிராமங்கள் மற்றும் பள்ளிகளில் நடத்தப்பட்டு வருகிறது.



இம்முகாம் மண்ணியல் துறை வல்லுநர் சுகந்தி மற்றும் ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர் பவித்ரா ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது. இந் நிகழ்வின் மூலம் கிராம மக்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் விவசாயிகளிடையே தூய்மை, தனிநபர் சுகாதாரம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் கழிவு மேலாண்மை குறித்த விழிப் புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



கிராமங்கள், பள்ளி வளாகங்கள் மற்றும் பொது இடங்களில் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு, சுத்தமான சுற்றுப் புறத்தைப் பராமரிப்பதன் அவசியம் எடுத்துரைக்கப்பட்டது. பொதுமக்களுக்கு குப்பைகளை முறையாக சேகரித்து அகற்றுதல் மற்றும் ஈரக் கழிவு, உலர் கழிவு ஆகியவற்றை தனித்தனியாகப் பிரித்தல் குறித்து செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

வேளாண் கழிவுகளை எரிப்பதைத் தவிர்த்து, மக்கும் கழிவுகளை மட்கிய உரமாக (Compost) மாற்றுதல் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் வேளாண் கழிவுகளைப் பயன்படுத்துதல் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பள்ளி மாணவர்களுக்கு தனிநபர் சுகாதாரம், முறையான கை கழுவுதல், தூய்மையான பள்ளி வளாகம் மற்றும் சுற்றுப் புறத்தைப் பராமரித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் விளக்கப் பட்டது. மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் பங்கேற்புடன் தூய்மை உறுதிமொழி மற்றும் பல்வேறு தூய்மை நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், பத்ம ஸ்ரீ விருது பெற்ற பத்திரப்பன், நிகழ்வில் உரை யாற்றி, தூய்மையின் முக்கியத்துவம், நீர்நிலைகளைப் பாது காத்தல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சமூகத்தின் கூட்டு பங்களிப்பு குறித்து எடுத்துரைத்தார். குறிப்பாக, நீர் நிலைகளை தூய்மையாகப் பாதுகாப்பது, அவற்றில் கழிவுகள் கலப்பதைத் தடுப்பது மற்றும் பொதுமக்களின் பங்கேற்புடன் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

விவசாயிகள் மற்றும் கிராம மக்களின் கூட்டு பங்கேற்புடன் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு, சுத்தமான, சுகாதார மான மற்றும் ஆரோக்கியமான கிராமப்புற சூழலை உருவாக்கு வதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

# கணியாகுளத்தில் விவசாயிகள் அட்மா உள் மாவட்ட பயிற்சி



கன்னியாகுமரி, செப்.30

கன்னியாகுமரி மாவட்டம், கணியாகுளம் கிராமத்தில் விவசாயிகளுக்கு வேளாண்மை விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு (அட்மா) திட்டத்தில் டிஜிட்டல் வேளாண்மை என்ற தலைப்பில் பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சிக்கு இராஜாக்கமங்கலம் வட்டாரத்தின் வேளாண்மை உதவி இயக்குநர் செல்வி பொன்ராணி தலைமை வகித்து டிஜிட்டல் வேளாண்மை குறித்து எடுத்துரைத்தார். வேளாண்மை இணை இயக்குனர் வாணி வேளாண்மை துறையின் திட்டங்கள் மற்றும் மானியங்கள் பற்றி உரையாற்றினார். திருப்பதிசாரம் வேளாண் அறிவியல் நிலையத்தின் துணை பேராசிரியர் முனைவர் ஜோஷி கலந்து கொண்டு நெல் இரகங்களின் குணாதிசயங்களை குறித்தும் வேளாண் அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்தும் மற்றும் வால்நெல் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். தோவாளை மலர் ஆராய்ச்சி நிலையத்தின் துணை பேராசிரியர் முனைவர் ராஜ் பிரவின் டிஜிட்டல் வேளாண்மை இணையதளம் மற்றும் செயலிகள் பற்றிய பல்வேறு தகவல்களை எடுத்துரைத்தார். வேளாண்மை விற்பனை துறை கண்காணிப்பாளர் அன்பழகன் தேசிய வேளாண் சந்தை (ந-ஹியுஆ) குறித்த கருத்துக்களை கூறினார். இறுதியாக வட்டார தொழில்நுட்ப மேலாளர் முனைவர் சௌமியா நன்றியுரை வழங்கினார். இதில் முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் முனைவர் சௌமியா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அஜிஷ் மற்றும் ஷீலா செய்திருந்தனர்.

# இப்கோ நானோ காப்பர்

# தாவர ஆரோக்கியத்திற்கான நவீன தீர்வு!

சென்னை, செப்.30

நானோ காப்பர் என்பது நவீன நானோ தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்பட்ட தாவர ஊட்டச்சத்து ஆகும். இது தாவர வளர்ச்சிக்கும், நோய் எதிர்ப்புத் திறனுக்கும், விளைச்சல் மேம்பாட்டிற்கும் மிகுந்த ஆதாரமாக இருக்கிறது. நானோ காப்பர் தாவர அமைப்பு மற்றும் குளோரோபில் உற்பத்தியில் உதவுகிறது. இதனால் தாவரங்கள் ஆரோக்கியமாக வளர்ந்து, ஒளிச்சேர்க்கை சிறப்பாக நடைபெறுகிறது. மேலும், இலைகள் பழுப்படையாமல் பயிரின் வளர்ச்சியை அதிகரித்து விதை உருவாகுவதையும் உறுதி செய்கிறது.

மேலும் பூச்சி மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும் தன்மை கொண்டது. இதனால் தாவரங்கள் பல்வேறு பூஞ்சை மற்றும் வைரஸ் நோய்களிலிருந்து தப்பித்து ஆரோக்கியமாக வளர்கின்றன. அதேபோல், ஊட்டச்சத்து உறிஞ்சுதலை அதிகரிக்கும் திறன் வாய்ந்தது. இதன் மூலம் தாவர வேர்மற்றும் இலைகள் ஊட்டச்சத்தை சிறப்பாக உறிஞ்சுவதால், முழு தாவர வளர்ச்சி மேம்படுகிறது. நானோ காப்பர் பயன்படுத்தும் முறையும் எளிமையானது.

**பயன்படுத்தும் அளவு :** ஒரு லிட்டர் நீருக்கு 1 மிலி வீதம், ஏக்கருக்கு 1000 மிலி. இதனை இலைவழியாகவோ, சொட்டு நீர்ப்பாசனம் மூலமோ பயன்படுத்தலாம். மேலும், தொழில்நுட்ப முன்னேற்றத்துடன், ட்ரோன் தெளிப்பு முறையிலும் நானோ காப்பர் பயன்படுத்தலாம். 10 லிட்டர் டேங்கிற்கு 100 மிலி நானோ காப்பர் இலைவழி தெளிக்கலாம். இதன் மூலம் விரைவாகவும், சமமாகவும் தெளித்து சிறந்த பயிர் ஆரோக்கியத்தைப் பெறலாம்.

நானோ காப்பர் தாவர ஆரோக்கியத்தை பாதுகாக்கும் சக்தி! இது பயிர்களின் வளர்ச்சி, விளைச்சல் மற்றும் தரத்தை மேம்படுத்தி, விவசாயியின் நம்பகமான இப்கோ திகழ்கிறது.




இப்கோ நானோ காப்பர்! நவீன விவசாயத்தின் நம்பிக்கையான தோழன்!!


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# கண்டமங்கலம் வட்டாரம் பரசு ரெட்டிபாளையம் கிராமத்தில் அட்மா திட்டத்தின் மூலம் விவசாயிகள் பயிற்சி




விழுப்புரம், செப்.30

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம் பரசு ரெட்டி பாளையம் கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் Dr.பாலசுப்பிரமணியன் தலைமையில் வேளாண்மை துறையில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டம் மூலம் இயற்கை வேளாண்மை மற்றும் அங்கக வேளாண்மை பயிற்சி நடத்தப்பட்டது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேன்மொழி விவசாயிகளை வரவேற்றார். இப்பயிற்சிக்கு AUROLRISHI பயிற்சி ஒருங்கிணைப்பாளர் மணிமாறன் கலந்து கொண்டு பஞ்சகாவியா, நீர் மோர் கரைசல், தேமோர் கரைசல், ஐந்திலை கரைசல், இயற்கை பூச்சி விரட்டி, பல தானிய விதைப்பு இவைகளை பயன்படுத்தி இயற்கை முறையில் விவசாயம் செய்து உடல் நலத்தையும் பேணி பாதுகாக்கலாம் என கூறினார். வேளாண்மை அலுவலர் விஜய் பயறு வகை பயிர்களை முக்கியத்துவத்தை எடுத்து கூறினார். மேலும் மண் மாதிரிகளில் எடுத்தல் மண்ணில் உள்ள நுண்ணுயிரிகளின் பயன்பாடு குறித்தும் பசுந்தால் உரம் விதைப்பதின் அவசியம் பற்றியும் மண் மாதிரி எடுத்து அதற்கு ஏற்றது போல் உரம் இடுதல் பற்றியும் விரிவாக கூறினார். மேலும் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார். துணை வேளாண்மை அலுவலர் தமிழ்ச்செல்வன் கலந்து கொண்டு வீட்டிற்கு தேவை யான காய்கறிகளை இயற்கை முறையில் நமது தோட்டத்திலும், மாடி தோட்டத்திலும் பயிர் செய்யும் வழிமுறைகளை பற்றி விரிவாக கூறினார். மானாவாரி நிலங்களில் இயற்கை விவசாயம் பற்றியும் நம்மாழ்வார், சுபாஷ் பாலேக்கரின் இயற்கை விவசாயம் முறைகளை பற்றியும் விரிவாக கூறினார். உதவி தொழில் நுட்ப மேலாளர் அருள்பாபு நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் வீரமணி செய்திருந்தார்.

# ஆட்டுக்குட்டிகளில் தெள்ளுப்பூச்சியால் ஏற்படும் பாதிப்புகளும் தடுக்கும் வழிமுறைகளும்

தெள்ளுப்பூச்சி என்பது இரத்தம் உறிஞ்சும் வெளிப்புற ஒட்டண்ணி ஆகும். இது இளம் ஆட்டுகுட்டிகள் மற்றும் ஆட்களில் அதிகமாக இருப்பதால் இரத்த சோகை, அதிகமாக சொறிதல், முடிகொட்டுதல் மற்றும் உடல் எடை குறைதல் போன்ற பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

**தெள்ளுப்பூச்சி பாதிப்பின் அறிகுறிகள்**

- அதிகமாக உடலை சொரிதல் மற்றும் உரசுதல்
- அமைதியின்மை
- எரிச்சல்
- முடி உதிர்தல் மற்றும் தோல் பாதிப்பு
- தோலில் சிறிய சிவப்பு புள்ளிகள் அல்லது கடிகள்
- அதிகபடியான தொற்று இருப்பின் இரத்த சோகை ஏற்படுத்தல்
- பலவீமாதல் மற்றும் சோர்வடைதல்
- குட்டிகளில் வளர்ச்சி குறைதல்
- இறுதியில் உயிரிழப்பும் ஏற்படலாம்.

**தெள்ளுப்பூச்சியால் ஏற்படும் பொருளாதார இழப்புகள்**

- இரத்த சோகையால் உடல் எடை மற்றும் வளர்ச்சி குறைதல்
- குட்டிகளின் உற்பத்தி திறன் குறைதல்
- தோலின் தரம் குறைதல்
- சிகிச்சை மற்றும் நோய்க்கட்டுப்பாடிற்கான செலவு அதிகரித்தல்
- கடுமையான தொற்றில் இறப்பு – இது விவசாயிகளிடையே நேரடி பொருளாதார இழப்பினை ஏற்படுத்துகிறது.

**தடுக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்**

- கொட்டகையை சுத்தமாகவும், உலர்ந்தும் வைத்திருக்க வேண்டும்.

- படுக்கை பொருட்களை அடிக்கடி மாற்ற வேண்டும்.

- பாதிக்கப்பட்ட ஆடுகளை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்க வேண்டும்.

- கால்நடை மருத்துவரை அணுகி அவரின் பரிந்துரைக்கு ஏற்ப சிகிச்சையளிக்க வேண்டும்

- புதிய ஆடுகளை மற்ற ஆடுகளோடு சேர்ப்பதற்கு முன் பரிசோதனை செய்ய வேண்டும்.

- கொட்டகை பட்டி தரை மற்றும் சுவர்கள் ஆகிய இடங்களில் தெள்ளுப்பூச்சியின் முட்டை மற்றும் இளம்புழக்களை கட்டுப்படுத்த வேண்டும்.



தெள்ளுப்பூச்சி தாக்கத்தால் ஆட்டில் இரத்த சோகை



ஆட்டின் உடலில் தெள்ளுப்பூச்சியின் தாக்கம்

கட்டுரை ஆசிரியர்கள் : *முனைவர் மா.வெங்கடேசன், ப.அர்ச்சனா, ச.அனு வைஷ்ணவி, அ.அபிநயஸ்ரீ மற்றும் முனைவர் சு.சிவராமன், கால்நடை சிகிச்சை வளாகம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம் – 636 112.*

# விதைப்புப்பருவம் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை

### பயறு வகை பயிர்கள்

தமிழ்நாட்டில் பயிரிடப்படுகின்ற 13 வகையான பயறுவகைப் பயிர்களில் உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு, கொண்டைக் கடலை, அவரை வகைகள், துவரை மற்றும் கொள்ளு போன்ற பயிர்கள் பெரும்பாலான பரப்பளவில் பயிரிடப்படுகிறது.



## உகந்த விதைப்பருவம்

| வ. எண் | பயிர் | இரகம் | வயது நாட்கள் | ஏற்ற பருவம் |
|---|---|---|---|---|
| 1. | துவரை | கோ(ஆர்ஜி)-7 | 120-130 | ஆடி |
| | | கோ 8 | 170-180 | கோடை |
| | | வம்பன் 3 | 100-105 | ஆடி |
| | | பிஎஸ்ஆர்-1 | மூன்று ஆண்டுகள் வரப்பு பயிர் | |
| 2. | உளுந்து | வம்பன் 5 | 65-70 | புரட்டாசி |
| | | வம்பன் 6 | 65-70 | கோடை |
| | | வம்பன் 8 | 65-70 | கோடை |
| | | ஏடீடி 5 | 62 | கோடை |
| | | ஏடீடி 3 | 70-75 | நெல் தரிசு |
| | | வம்பன் 10 | 70-75 | புரட்டாசி |
| | | வம்பன் 11 | 70-75 | புரட்டாசி |
| 3 | பாசிப்பயறு | கோ 7 | 62 | ஆடி |
| | | கோ 8 | 55-60 | சித்திரை,ஆடி, புரட்டாசி |
| | | வம்பன் 3 | 65-70 | ஆடி |
| | | ஏடீடி 3 | 66 | நெல் தரிசு |
| 4 | கொண்டைக் கடலை | கோ 6 | 85-90 | |
| | | கோ 4 | 85-90 | ஐப்பசி – கார்த்திகை |
| 5 | தட்டைப் பயிறு | கோ 7 | 70-75 | புரட்டாசி |
| | | வம்பன் 1 | 55-65 | ஆடி, புரட்டாசி |
| | | பையூர் 1 | 90 | ஆடி |
| | காய்கறி | | | ஆடி, புரட்டாசி |
| | தட்டை | | | |
| | பயிறு | வம்பன் 2 | 75-80 | கோடை |

## ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம்

தமிழ் நாட்டில் பெரும்பாலான பரப்பளவில் உளுந்து, பாசிப்பயறு விதைக்களாக பயிரிடப்படுகிறது. பயிர் மகசூல் பல்வேறு காரணிகளில் பாதிக்கப்பட்டாலும், பூச்சிகளில் ஏற்படும் சேதம் பெரும் பங்கு வகிக்கின்றது. பூச்சிகள் தாக்குதலின் பொருளாதார சேதாரநிலை மற்றும் இதற்கு அதிகமாகும் பொழுது பூச்சிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

| வ. எண் | பூச்சி பெயர் | பொருளாதாரச் சேதநிலை |
|---|---|---|
| 1 | அசுவினி | 25 செ.மீ நீளத்தண்டில் உட்பூச்சிகள் |
| 2 | காய்த் துளைப்பான் | 10 சதம் தாக்கப்பட்ட காய்கள் |
| 3 | புள்ளிக் காய்ப்புழு | காய்க்கு 3 புழுக்கள் |
| 4 | தண்டு ஈ | 10% தாக்கப்பட்ட செடிகள் |
| 5 | புகையிலை வெட்டுப்புழு | 100 மீ வரிசைக்கு 8 முட்டைக்குவியல்கள் |

**ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள்**

இளம் பயிர்களில் தண்டு ஈ தாக்குதலால் ஏற்படும் பயிர்களின் எண்ணிக்கை குறைவினை தவிர்த்திட பரிந்துரைக்கப்பட்ட விதையளவினை காட்டிலும் 25 சதம் அதிகமாக உபயோகித்து விதைப்பு மேற்கொள்தல்.

சாறு உறிஞ்சும் பூச்சிகள் (இலைப்பேன், அசுவினி, தத்துப்பூச்சி) தண்டு ஈ கட்டுபாடு

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



டைமீத்தோயேட் 30 ஈசி அல்லது இமிடாக்குளோபிரிட் 17.8 சதம் எஸ்.எல் கிலோவிற்கு 5 மிலி அளவில் விதை நேர்த்தி செய்தல்.

ஆரம்பநிலை தாக்குதலினை கட்டுப்படுத்த 5 சதம் வேப்பங்கொட்டை கரைசல் தெளிப்பு.

**ஏக்கருக்கு 10 மஞ்சள் நிற ஒட்டுப் பொறிகள்**

காய்ப்புழு, புரோடினிய புழு, காய்த்துளைப்பான் போன்றவற்றின் தாக்குதலை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 60 மிலி குளோரான்ட்னி லிப்ரோல் 18.5 சதம் எஸ்சி அளவில் தெளித்தல்.

சேமிப்பில் தாக்கும் பயறு வண்டு கட்டுப்படுத்த, விதைக் குவியல்களை சூரிய வெப்பத்தில் காலை 9 மணியிலிருந்து 11 மணி வரையிலும் மதியம் 3 மணியிலிருந்து 5 மணி வரையிலும், தானியமாக உபயோகப்படுத்தினால் 10 சதம் ஈரப்பதம் அடையும் வரையும், விதைகளாக உபயோகப்படுத்துவதானால் 8 சதம் ஈரப்பதம் அடையும் உலர வைத்தல்.

குழிப்பொறி அல்லது தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் கவர்சசிப்பொறி, இதில் ஏதாவதொன்றினை பயன்படுத்தி வயல்வெளியிலிருந்து விதையுடன் தொற்றி வந்த வண்டுகளை கண்காணித்து விதைகளை சூரிய வெப்பத்தில் காய வைப்பதன் மூலம் முட்டைகளை அழிக்கலாம்.

100 கிலோ விதையளவிற்கு ஊக்குவிக்கப்பட்ட களிமண் 1 கி.கி அல்லது மாலத்தியான் 5 சத்துஜுகள் 1 கி.கி அல்லது புங்கம் எண்ணெய் 1 லிட்டர் அல்லது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேப்ப எண்ணெய் 60 ஈசி 1 லிட்டர் ஏதாவது ஒன்றினை கலந்து பாதுகாக்கலாம்.

விதைகளை பாலித்தீன் உள்ளுறை கொண்ட சாக்குப் பைகளில் சேமிக்கவும்.

மேலும் விவசாயிகள் தங்களின் விதையின் தரத்தினை பரிசோதனை மூலம் அறிந்து கொள்ள திருப்பூர் மாவட்டத்தில் எண்.328/1, முதல் தளம், திருநகர் காலனி, திருச்சி ரோடு, பல்லடத்தில் அமைந்துள்ள திருப்பூர் விதைப்பரிசோதனை நிலையத்தை அணுகி விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- கட்டணமாக செலுத்தி பயனடையலாம்.

இவ்வாறு திருப்பூர், விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் சி.வசந்தி மற்றும் ஜோ.மோ.அறிவுமதி அவர்கள் தங்களது செய்திக்குறிப்பில் கூறியுள்ளனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741